கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025–ம் வருடம் ஜீன் மாதம் 17ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.1/2023
இன்
அசல் வழக்கு எண்.154/2023
* * * *

பெரியசாமி ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. ஞானசேகரன்
2. குமரேஸ்வரி
3. நந்தகுமார்
4. ஆறுமுகம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 10.06.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தினேஷ்பாபு அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்து வந்த மனுவில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்

வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உ த்தரவு**

இந்நிர் மனுதாரர்/வாதிக்கு மனுச்சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தினை இந்நிர் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜென்டுகளோ எந்தவிதமான இடையூறோ, ஆக்கிரமிப்போ சட்டவிரோதமாக செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இம்மனு முடியும் வரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு தோன்றா நிலையில் ஒருதலைபட்ச உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்நிர் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) இந்நிர் மனுதாரர்/வாதிக்கு மனுச்சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தினை இந்நிர் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜென்டுகளோ எந்தவிதமான இடையூறோ, ஆக்கிரமிப்போ சட்டவிரோதமாக செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இம்மனு முடியும் வரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு தோன்றா நிலையில் ஒருதலைபட்ச உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில், அசல் வழக்கில் இந்நிர் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவித்துக்கொள்ள வேண்டி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்வு:–**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இம்மனு சம்பந்தமாக இருதரப்பிலும் சாட்சிகள் யாரும்

விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

3.1) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெறவேண்டும் என்றால்,

(i) மனுதாரரின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்பதை நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனையை நிரூபணம் செய்யும்விதமாக மனுதாரர்/வாதி தரப்பில் எவ்விதமான வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

3.2) மேலும், பொதுவாக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்படும் வழக்குகளில், இடைக்கால தடையுத்தரவு வழங்குவது, அசல் வழக்கில் கோரியுள்ள பிராதான பரிகாரத்தை வழங்குவது போன்றது என்றும், எனவே விதிவிலக்கான

வழக்குகளைப் பொறுத்து மட்டுமே இடைக்கால தடை உத்தரவு வழங்க வேண்டும் என்பது முன்தீர்ப்புகளினால் தீர்மானிக்கப்பட்ட விதி ஆகும்.

3.3) இவ்வழக்கானது மனுதாரரர்/வாதியால் இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர்/வாதிக்கு இம்மனுவினை பொறுத்து ஒரு இடைக்கால தடை உத்தரவு வழங்குவது அசல் வழக்கில் கோரியுள்ள பிரதான பரிகாரத்தை வழங்குவது போன்று ஆகிவிடும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது மனுதாரர்/வாதிக்கு கிடைக்கக்கூடியதா இல்லையா என்பது வழக்கின் முழுவிசாரணைக்கு பின்தான் தீர்மானிக்க இயலும். எனவே மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடையுறுத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 17.06.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.06.17 16:10:44 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு** :–

**1) மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.06.17 16:10:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.01/2023
இன்
அசல் வழக்கு எண்.154/2023
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 17.06.2025